**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.22** |
| **Name** | **:** | **Dr.நாகேந்திரகுமார்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரிகள் 1 முதல் 10 ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.10.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.4.2017 அன்று நான் அரசு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது, செய்யாறு பொறுப்பு நீதித்துறை நடுவர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி தூசி காவல்நிலைய குற்ற எண்.26/2017 மற்றும் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை எண்.18/2017 வழக்கில் இறந்துபோன திரு சுரேஷ், வயது 38 ஆண் என்பவரது நாவடி எலும்பினை தூசி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சடகோபன் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு அதே நாளில் மருத்துவ பரிசோதனை

செய்தேன்.

பரிசோதனையின்போது நாவடி எலும்பின் வலது பெரும்கொம்பு சீரற்ற முறையில் முழுமையாக முறிந்து காணப்பட்டது. அதனை சுற்றியிருந்த மென்திசுக்கள் கன்றியிருந்தன. மென்சிடின் ஆய்வில் ரத்த பொருட்கள் கண்டறியப்பட்டன. இதனால் மேற்படி நபரின் நாவடி எலும்பானது அவரது இறப்பிற்கு முன்னதாகவே முறிந்துள்ளது என்றும், இந்த நாவடி எலும்பின் முறிவானது அவர் மூச்சு திணறல் ஏற்பட்டு இறக்கக்கூடிய அளவிலான அழுத்தம் அவரது கழுத்தில் காணப்பட்ட முக்கியமான உறுப்புகளின் மீது ஏற்பட்டுள்ளது என்பதையே குறிக்கிறது என்றும் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.29. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

7 முதல் 10 எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.